## 61. பட்சிக்கிற அக்கினி சுட்டெரிக்கும்

### பல்லவி

பட்சிக்கிற அக்கினி சுட்டெரிக்கும் அக்கினி
பரலோக அக்கினி - என்னில்
வாசம் செய்யும் தேவ அக்கினி

### சரணங்கள்

1. ஓரேப் பர்வதத்தில்
மோசேயை சந்திக்க
முட்செடியில் பற்றின அக்கினி
தேவ அக்கினி அது பட்சிக்கும் அக்கினி
- பட்சிக்கிற

2. ஜனங்களை சந்திக்க
சீனாய் மலையினில்
இறங்கின அக்கினி - தேவ அக்கினி
அது பட்சிக்கும் அக்கினி
- பட்சிக்கிற

3. எலியா பலிப்பீடத்தில்
பலிகளை எரித்திட
இறங்கின அக்கினி - தேவ அக்கினி
அது பட்சிக்கும் அக்கினி
- பட்சிக்கிற

4. பெந்தேகோஸ்தே நாளினில்
மேல்வீட்டு அறையில்
இறங்கின அக்கினி - தேவ அக்கினி
அது பட்சிக்கும் அக்கினி
- பட்சிக்கிற